பக்கங்கள்:-13

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 16 | செவ்வாய்க்கிழமை | 31.12.2024 | அதிர்வு 151

## யாழில் சயனைட் அருந்தி நகைத் தொழிலாளி சாவு!

யாழ்ப்பாணத்தில் சயனைட் அருந்தி நகைத் தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தேவதாஸ் திலீப்குமார் (வயது 50) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே நேற்று 05

# தமிழரசு தலைநிமிர வேண்டும்!




## மக்களின் தீர்ப்புக்கமைய தோற்கடிக்கப்பட்டவர்களை விலத்தி வையுங்கள் என்று கஜேந்திரகுமார் வலியுறுத்து

”இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கை இழந்த பாதையைத் தொடர்கின்ற வகையில் கட்சியின் முடிவுகள், பதவிகள் அமையக் கூடாது.”

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

“தமிழரசுக் கட்சி பிரதான கட்சியாக உள்ளமையால் அந்தக் கட்சியைத் தவிர்த்து தமிழினம் முன்செல்ல முடியாது.” - என்றும் அவர் கூறினார். 05

# 2025 இன் ஆரம்பத்தில் எம்மால் நல்ல நிலையை அடைய முடியும்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நம்பிக்கை

“எமது அரசு பதவியேற்று 3 மாத காலத்துக்குள் நாட்டை ஸ்திரப்படுத்த முடிந்துள்ளது. இடைநிறுத்தப்பட்ட பல வெளிநாட்டு அபிவிருத்தி கருத்திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நிலையாக ஸ்திரத்தன்மையை நோக்கிய பாதையில் இலங்கை நகர்கின்றது என்பதை சர்வ தேசசமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. அடுத்த வருடத்தின் தொடக்கத்தில் எம்மால் நல்லதொரு நிலையை அடைய முடியும்.”

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாம் திட்டமிட்ட வகையில் முறையாக எமது அபிவிருத்தி 05






நேர்மைக்கும், நீண்ட அனுபவத்திற்கும், சேவை மூப்புக்கும், தகுதிக்கும், ஒழுங்கு முறைக்குமே தேசிய மக்கள் சக்தியில் முன்னுரிமையளிக்கப்படுமேயன்றி, செல்வாக்கின் அடிப்படையில் – அல்லது குறுக்கு வழியில் – அல்லது பின்கதவால் – உயர் பதவிகள் மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்பட மாட்டா என்பது அநுர அரசின் தேர்தல் காலத்து வாக்குறுதிகளில் ஒன்று. அப்படி ஒழுங்காக நடப்பதாகத்தான் தேசிய மக்கள் சக்தியின் தரப்பினர் பீற்றிக் கொள்கின்றனர்.

ஆனால், அந்தக் கதை எல்லாம் ஆட்சியைப் பிடிக்கும் வரை தான் என்றாகி விட்டது போலும்.

‘ஆறு கடக்கும் வரையில்தான் அண்ணன் தம்பி, அதன் பின்பு நீ யாரோ, நான் யாரோ’ என்ற பழமொழி ஆட்சியாளர்கள் அனைவருக்கும் பொருந்தும் என்பதனை அநுர அரசும் நிரூபித்தே வருகின்றது.

இதற்கு உதாரணமாக பல விடயங்கள் இருந்தாலும் ஒன்றை மட்டும் பார்ப்போம்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் 05

# விஜயகாந்த்தின் நினைவேந்தலையொட்டி யாழ். நகரில் சுவரொட்டிகள்!




(ந.லோகதயாளன்)

மறைந்த இந்தியத் திரைப்பட நடிகர் கப்டன் விஜயகாந்த்தின் ஓராண்டு நினைவை முன்னிட்டு யாழ்ப்பாணம் நகரின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

நடிகர், அரசியல்வாதியாகச் செயற்பட்ட காலத்தில் ஈழத் தமிழர்கள் மீதும், அவர்களின் போராட்டம் மீதும் அதிக பற்றுடனும் உணர்வுடனும் செயற்பட்ட ஒருவர் என்ற வகையில் ஈழத் தமிழர்களின் மனங்களில் கப்டன் விஜயகாந்த் இடம் பிடித்திருந்தார்.

ஈழத் தமிழர்களின் போராட்ட ஆர்வம் காரணமாகத் தனது மகனுக்குப் பிரபாகரன் என்ற பெயரையும் விஜயகாந்த் சூட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது,

# சீனாவின் அன்பளிப்பில் பருத்தித்துறையில் பொருத்து வீடு





(ந.லோகதயாளன்)

சீனாவால் அன்பளிப்புச் செய்யப்பட்ட வீடு ஒன்று பருத்தித்துறையில் அமைக்கப்பட்டுள்ளது.

சீன அரசால் வடக்கு மாகாண மீனவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட பொருத்து வீடுகளில் ஒன்றே தற்போது பருத்தித்துறையில் அமைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் மீன்பிடித் திணைக்களத்தின் ஆளுகையில் உள்ள துறைமுகப் பகுதியில் இந்தப் பொருத்து வீடு அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கான பொருத்து வீடுகள் தற்போது நாவற்குழிப் பகுதியில் உள்ள யாழ். மாவட்ட செயலக களஞ்சியத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

அந்த வீட்டு மாதிரியை மீனவர்கள் பார்வையிடுவதற்காகவே பருத்தித்துறையில் ஒரு வீடு தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

# ஐ.தே.கவை அழிக்க இடமளியோம்!

## ரவி கருணாநாயக்க எம்.பி. திட்டவட்டம்



“ஐக்கிய தேசியக் கட்சியை ஒரு சிலர் பணயக் கைதியாகப் பயன்படுத்த முற்படுகின்றனர். எனினும், கட்சியை அழிப்பதற்கு இடமளிக்க முடியாது.”

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“ரணில் விக்கிரமசிங்கவுக்கு அடுத்தபடியாக ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள சிரேஷ்ட உறுப்பினர் நான்தான். எனவே, ஒரு சிலரின் தனிப்பட்ட தேவைக்காகக் கட்சியை அழிக்க இடமளிக்க முடியாது. மக்களின் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்க வேண்டும்.

கட்சியை விட்டுச் சென்றவர்களும் மீள வரவேண்டும். ஒரு சிலருக்காக எமது கட்சியைப் பணயக் கைதியாகப் பயன்படுத்த இடமளிக்க முடியாது.

இந்த நாட்டில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்திய கட்சியே ஐக்கிய தேசியக் கட்சியாகும். அக்கட்சியை பழைய நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும்.” – என்றார்.




# முன்பள்ளி சிறார்களை ஊக்கப்படுத்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(பா.சதீசன்)

முன்பள்ளி சிறார்களை ஊக்கப்படுத்தி அவர்களின் கல்வி செயற்பாட்டை முன்னெடுக்கும் நோக்கில் கற்றல் உபகரணங்கள் நேற்று வற்றாப்பளையில் வைத்து வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

வற்றாப்பளை, கேப்பாபுலவு, பிலக்குடியிருப்பு ஆகிய கிராமாங்களை உள்ளடக்கிய 80 முன்பள்ளிகளின் சிறார்களுக்கு புலம்பெயர் நாட்டில் வசிக்கும் பிரதீபராஜ் சிந்துஜா தம்பதிகளின் செல்வப்புதல்வன் உருத்திரதேவாவின் நான்காவது பிறந்த தினத்தை முன்னிட்டு சமூக பணியாக இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

சமூக செயற்பாட்டாளர் ஞா. யூட்சன் தலைமையில் இடம்பெற்ற கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் முன்னாள் வடமாகாணசபை விவசாய அமைச்சர் க.சிவனேசன் , முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.















# மின்கட்டணத் திருத்தம் தொடர்பில் பெப்ரவரி 17இல் இறுதி தீர்மானம்

மின்கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதி தீர்மானத்தை எதிர்வரும் 17ஆம் திகதி அறிவிக்கவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கான பொதுமக்களின் கருத்துகளை கேட்டறியும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்படுவதாக ஆணைக்குழு கூறியுள்ளது.

நேற்று ஊவா மாகாணத்திலும் எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் ஏனைய மாகாணங்களிலும் பொதுமக்கள் கருத்துகளை கேட்டறியும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கையின் பின்னர் எடுக்கப்படும் இறுதி தீர்மானம் எதிர்வரும் 17ஆம் திகதி அறிவிக்கப்படுமென ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

இதனிடையே, மின்சார சபை ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவையும் வழங்கி மின்சாரக் கட்டணத்தையும் 6 வீதத்தால் குறைக்க முடியும் என இலங்கை மின்சார சபையின் பொதுஜன முற்போக்கு ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கான பரிந்துரைகள் கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியிலேயே முன்வைக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# கொழும்பை அண்மித்த பகுதிகளில் விசேட போக்குவரத்து திட்டம்



கொழும்பு நகரை அண்மித்த பகுதிகளில் ஏற்படக் கூடிய வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காகபொலிஸ் விசேட போக்குவரத்து ஒழுங்குகளை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதன்படி புறக்கோட்டை, கோட்டை, கொம்பனித் தெரு, மருதானை, கொள்ளுப்பிட்டி, பம்பலபிட்டி, கறுவாத் தோட்டம் ஆகிய பொலிஸ் பிரிவுகளை அண்மித்த வீதிகளில் இந்த போக்குவரத்து ஒழுங்குகள் அமலபடுத்தப்படவுள்ளன.

அத்துடன், இன்று காலி முகத்திடலில் உள்ள வாகன தரிப்பிடங்களில் வாகனங்களை நிறுத்த அனுமதி வழங்கப்படாது என பொலிஸ் தெரிவித்துள்ளது.

இதற்குப் பதிலாக கட்டணத்துடன் கூடிய தனியார் வாகன நிறுத்துமிடங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

# வாகனம் வீதியை விட்டு விலகி விபத்திற்குள்ளானதில் ஐவர் காயம்



நல்லதண்ணி – மஸ்கெலியா பிரதான வீதியின் மஸ்கெலியா – பிரவுன்லோ தோட்டப் பகுதியில் கெப் வாகனமொன்று வீதியை விட்டு விலகி விபத்திற்குள்ளாகியுள்ளது.

விபத்தில் ஐவர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சிவனொளிபாதமலை யாத்திரைக்கு சென்று மீண்டும் கொடகவெல பகுதி நோக்கி பயணித்த மேற்படி கெப் வாகனத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 7 பேர் பயணித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

மேலதிக அரசாங்க அதிபர் பதவி வெற்றிடம் நீண்ட காலமாக காணப்பட்டது. அதனை நிரப்பத் தற்போதைய கோப்பாய் பிரதேச செயலாளர் சிவசிறியின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது. இவரிற்கு ஏற்கனவே கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் இடமாற்றம் அறிவிக்கப்பட்டதனால் மேலதிக அரச அதிபர் பதவி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு அவரின் இடமாற்றம் உறுதி செய்யப்பட்டு விட்டது.

இதனால் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் மேலதிக அரசாங்க அதிபர் பதவி வெற்றிடத்திற்கு தற்போது இன்னுமோர் பிரதேச செயலாளரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டு அவருக்கு நியமனமும் வழங்கப்பட்டு விட்டது. தற்போது நியமனம் பெற்றுள்ள நிர்வாக சேவை தரம் ஒன்றைச் சேர்ந்த அதிகாரியை விடவும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 8 பிரதேச செயலாளர்கள் சேவை மூப்பில் உள்ளனர்.

இவ்வாறு சேவை மூப்பில் உள்ள 8 அதிகாரிகளையும் புறந்தள்ளி, 9 ஆவது இடத்தில் உள்ள ஒருவரின் பெயர் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரச அதிபர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டு, நியமிக்கப்பட்டுள்ளமைதான் திறமைக்கும், சேவை மூப்புக்கும் மதிப்பளிக்கும் அநுர அரசின் வேலைத் திட்டமா என மூத்த நிர்வாக அதிகாரி ஒருவர் கடிந்துகொண்டமையோடு, நம்பி வாக்களித்த எமக்கு இது தேவைதான் எனத் தமக்குள் விசனமும் தெரிவித்துகொண்டார்.

## யாழில் சயனைட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திங்கட்கிழமை இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி குடும்பஸ்தரும் அவரது மகனும் கன்னாதிட்டிப் பகுதியில் உள்ள நகை செய்யும் இடத்தில் வேலை செய்து வந்தனர். இந்நிலையில் மேற்படி நபர் நேற்று வேலைக்காகச் சென்றிருந்தார். பின்னர் மகன் வேலைக்குச் சென்றபோது அங்கு தந்தை மயக்கமடைந்து இருந்ததை அவதானித்தார்.

குறித்த விடயத்தைத் தாய்க்குத் தெரியப்படுத்திய மகன், தாயை அழைத்து மயக்கமடைந்ததந்தையையாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தார். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரிநமசிவாயம்பிறேம்குமார்மேற்கொண்டார்.

சயனைட் அருந்தியதால் அவரது மரணம் சம்பவித்துள்ளது என்று உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

## தமிழரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பைச் சரியாகப் புரிந்துகொண்டு, மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சிலரின் ஆதிக்கத்தைக் கட்சி தொடர்ந்தும் அனுமதிப்பதன் ஊடாகத்தொடர்ந்தும்ஒருமோசமானகொள்கை ரீதியான பாதையில் தமிழ்த் தேசிய அரசியலைத் தள்ளும்." – என்றும் கஜேந்திரகுமார் எம்.பி. குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு சமகால அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஒரு பொதுப்புள்ளியில் சந்திப்பதற்குத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரனுடன் ஏற்கனவே பேச்சுகளை ஆரம்பித்துள்ளதாகவும், அதேபோல் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுடனும் பேச்சுகளை ஆரம்பித்துள்ளதாகவும் கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவித்தார்.

இந்தப் பேச்சுகளை அடுத்த ஆண்டில் முன்கொண்டு செல்ல எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

தமிழரசுக் கட்சி சரியான மாற்றங்களைச் செய்யுமானால் தமிழினத்துக்கும் தமிழ்த் தேசிய அரசியலுக்கும் ஒரு சுபீட்சமாக அமையும் என்றும் கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

## 2025இன் ஆரம்பத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கருத்திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். ஆட்சிக்கு வந்தோம் செய்தோம் என எம்மால் நடந்துகொள்ள முடியாது. நாம் நிறைவேற்ற வேண்டிய பல விடயங்கள் உள்ளன.

கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட தவறான தீர்மானங்கள் காரணமாகவே இந்த நாடு இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எனினும், முறையாகவும் திட்டமிட்ட வகையிலும் நாட்டைக் கட்டியெழுப்பவே மக்கள் எமக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளனர். வளமான எதிர்காலத்துக்காக எமக்கு இந்த மக்கள் ஆணை கிடைத்துள்ளது.

2025ஆம் ஆண்டு முதல் திட்டமிட்ட வகையில் முறையாக எமது அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதே எமது எதிர்பார்ப்பாகும். அதற்கான தலைமைத்துவத்தை நாம் வழங்குவோம். இதற்காக அரச சேவையில் உள்ள அனைவரும் எமக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள் என நாம் நம்புகின்றோம்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்ப அரசியல் தலைமைத்துவம் மற்றும் அரச அதிகாரிகள் ஆகிய இரு தரப்பினரும் ஒரு நோக்கத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் என அனைவரும் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராக உள்ளனர். எனவே, அவர்களுடன் இணைந்து நாட்டின் சுபீட்சத்துக்காக அனைத்து நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம்." – என்றார்.





# சிறைச்சாலைகளில் போதைப்பொருள் கடத்தல் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை

சிறைச்சாலைகளில் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலக செயற்பாடுகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை வழங்கினார்.

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகத்துடன் தொடர்புடைய நபர்களின் வழக்கு நடவடிக்கைகளைத் துரிதமாக நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவித்த ஜனாதிபதி, அதற்காக இணையவழி முறையைப் பின்பற்றுவதற்கான சாத்தியக்கூறுகளையும் சுட்டிக் காட்டினார்.

ஒன்லைன் முறையினூடாக வழக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஏற்படும் சிரமங்களைக் கண்டறிந்து அது தொடர்பான உட்கட்டமைப்பை மேம்படுத்துமாறும் ஜனாதிபதி அறிவித்தார்.

மேலும், சிறைச்சாலைகளில் இடம்பெறும் முறைகேடுகளில் அதிகாரிகளுக்கும் தொடர்பு இருப்பதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இதனுடன் தொடர்புள்ள அதிகாரிகளுக்கு நிறுவன மட்டத்திலான ஒழுக்காற்று நடைமுறைகளுக்கு அப்பால் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

இதேவேளை, இக்கலந்துரையாடலில் அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன், அந்த வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.






# ஜனாதிபதி நிதியத்தின் அலுவலகம் புதிய இடத்திற்கு மாற்றப்படுகிறது

ஜனாதிபதி நிதியத்தின் அலுவலகம் 2025 ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் புதிய இடத்தில் நிறுவப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய ஜனாதிபதி நிதியத்தின் புதிய அலுவலக வளாகம் கொழும்பு 01, ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக அமைந்துள்ள ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் கட்டடத்தின் தரைத் தளத்தில் நிறுவப்படவுள்ளது.

இதுவரை லேக்ஹவுஸ் கட்டடத்திலேயே ஜனாதிபதி நிதியத்தின் அலுவலகம் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஆசியாவின் பெறுமதிமிக்க தீவாக இலங்கையை நிலைநிறுத்துவது தொடர்பில் அநுர ஆராய்வு!

இலங்கையை சுற்றுலாப் பயணிகளின் கவரக்கூடிய இடமாக மாற்றுவதற்குத் தேவையான திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை மீளமைப்பதன் ஊடாக சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பான செயற்பாடுகள் வலுவடையும் என ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நாடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க இதனைத் தெரிவித்தார்

ஆசியாவின் மிகவும் பெறுமதிமிக்க மற்றும் பசுமையான தீவாக இலங்கையை நிலைநிறுத்துவது பற்றியும் இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

சுற்றாடல் மற்றும் கலாசாரத் துறைகள் மூலம் சுற்றுலாவை மேம்படுத்துவது குறித்தும் நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்துவதில் முறையான மற்றும் முறைசாரா துறைகளில் உள்ள அனைத்து தரப்பினர்களையும் ஒன்றிணைப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் புத்தசாசன, மத அலுவல்கள் மற்றும் கலாசார அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி, சுற்றாடல் அமைச்சர் கலாநிதி தம்மிக்க படபெந்தி, சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் தலைவர் புத்திக ஹேவாவசம், வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டார, மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டி.எம்.ஜே.நிலான் குரே உள்ளிட்ட அதிகாரிகள் இணைந்து கொண்டனர்.

# மழையுடனான வானிலை சில நாள்களுக்கு தொடரும்



அடுத்துவரும் சில நாள்களுக்கு நாட்டின் வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் நிலவும் மழையுடனான வானிலை சற்று அதிகரிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், மாத்தளை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் 75 மில்லி மீற்றருக்கும் அதிக மழை பெய்யக்கூடும் என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்யக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இடைக்கிடையே மணித்தியாலத்திற்கு 30 முதல் 35 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இடியுடன் மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் அனர்த்தங்களைக் குறைப்பதற்குத் தேவையான பாதுகாப்பு முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நிர்வாகத்தில் படைத் தரப்பு

நாட்டைப் பாதுகாக்கும் பந்தோபஸ்துப் பணியே பாதுகாப்புப் படைகளின் பிரதான கடமையாகும். அந்த முதன்மையான இராணுவப் பணிகளுக்காக மட்டுமே பாதுகாப்புப் படைகள் பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படும் என பாதுகாப்புச் செயலாளர் ஒய்வு பெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொண்டா தெரிவித்திருக்கின்றார்.

திருகோணமலை கடற்படை மற்றும் கடல்சார் அகாடமியில் நடைபெற்ற கடற்படையின் கடற்றொழில் அணிவகுப்பில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் உபகரணங்களுடன் பாதுகாப்புப் படைகளை நவீனப்படுத்த அரசு அதிகபட்ச முயற்சிகளை எடுத்து வருகிறது என்றார் அவர்.

"நமது நாட்டைப் பாதுகாப்பதற்கான இராணுவப் பணிகளின் முதன்மைப் பாத்திரத்திற்காக மட்டுமே எங்கள் பாதுகாப்புப் படைகள் பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படுவதை நாங்கள் உறுதி செய்கிறோம். வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கும் ஆயுதப் படைகளின் கட்டமைப்பை மதிப்பாய்வு செய்ய நாங்கள் எதிர்பார்க்கிறோம். இலக்கு ஆள்சேர்ப்பை செயல்படுத்துதல் மற்றும் பணியாளர் தேர்வில் அளவை (எண்ணிக்கையை) விட தரத்தில் கவனம் செலுத்துவோம்" -என்று அவர் கூறினார்.

இலங்கையில் படைகளின் கட்டமைப்பைக் கையாள்வதில் தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசு எடுத்துள்ள நிலைப்பாட்டை இந்தக் கருத்து வெளிப்படுத்தி நிற்கின்றது.

படைத்தரப்பை அரசியலுக்குள் - ஆட்சி அதிகார விடயங்களுக்குள் - சிவில் நிர்வாகத்துக்குள் - அளவுக்கு அதிகமாக உள் நுழைத்து, ஒரு குழப்பகரமான ஆட்சி முறை நிலையை நாட்டில் ஏற்படுத்தி இருந்தது கோட்டாபய ராஜபக்ஷவின் அரசு.

அந்தப் போக்கில் இருந்து நாட்டை முழுமையாக விடுவித்து ஆட்சி அதிகாரத்தையும் சிவில் நிர்வாகத்தையும் முழுமையான ஜனநாயகக் கட்டமைப்பு முறைமையின் கீழ் கொண்டு வருவதற்கான கொள்கை நிலைப்பாட்டை பாதுகாப்புச் செயலாளர் கோடிகாட்டி இருக்கின்றார் என்று கருத முடியும்.

இலங்கையின் ஜனநாயக முறைகளில், சாதாரண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைத் தேர்தலைக் கூட முன்பின் சந்தித்திராத - அரசியல் அனுபவமேயற்ற - முன்னாள் இராணுவ அதிகாரியான கோட்டாபய ராஜபக்ஷவை நேரடியாக ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வைத்து, அதிகாரத்தை அவரிடம் ஒப்படைத்ததன் பலனை நாடு எதிர்கொண்டது. அரசியல், சிவில் நிர்வாகப் பதவிகள் முன்னாள் படை அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டன. ராஜதந்திர பதவிகளுக்கு முன்னாள் படையினர் நியமிக்கப்பட்டனர். சிவில் நிர்வாக அதிகாரங்கள் படையினருக்கும் முன்னாள் படை அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டன. வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் பதவி கூட முன்னாள் படை அதிகாரி வசம் ஒப்படைக்கப்பட்டதால் நாடு பல இராஜதந்திர நெருக்கடிகளை எதிர்கொண்டது.

ஜனநாயக - சிவில் நிர்வாக நடவடிக்கைகளை படை மயப்படுத்தும் கோட்டாபய ராஜபக்ஷவின் தூர நோக்கற்ற, குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய அந்தச் செயற்பாட்டை அப்போதே எதிரணியில் இருந்த தேசிய மக்கள் சக்தி கடுமையாக எதிர்த்தது.

கோட்டாபய அரசின் காலத்தில் கொண்டுவரப்பட்ட இந்தத் தவறான முன்னுதாரணம் இனிமேல் பின்பற்றப்பட மாட்டாது, அதிலிருந்து விலகி பழைய ஜனநாயக - சிவில் ஆட்சி முறை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்பதையே பாதுகாப்பு செயலாளரின் கருத்து வெளிப்படுத்துகிறது.

படைக்கு ஆளணியைத் தேர்வு செய்யும் விடயத்தில் எண்ணிக்கையை விட தரத்துக்கு முன்னுரிமை என்ற அவரின் கருத்தும் கவனிக்கத்தக்க விடயமாகும்.











# முல்லைத்தீவு மாவட்டத்தில் முதன்முறையாக பிரமாண்டமான முல்லை பிரீமியர் லீக் போட்டி

## கிரிக்கெட் வீரர்களுக்கான மெகா ஏலம்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிரிக்கெட் வீரர்களை அடையாளம் காணவும், அவர்களின் திறமையை உயர்த்தும் நோக்குடன் நடத்தப்படும் முல்லை பிரீமியர் லீக் கடினபந்து கிரிக்கெட் வீரர்களுக்கான மெகா ஏலம், முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கடந்த சனிக் கிழமை இரவு சிறப்பாக இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சிறந்த மற்றும் திறமையான வீரர்களை தேர்ந்தெடுத்து, தேசிய மற்றும் சர்வதேச அளவுகளில் அவர்கள் பிரபலமடைய வழிவகுப்பதனை முதன்மையான இலட்சியமாக கொண்ட இப் போட்டி மாவட்ட அளவில் முதன்முறையாக நடைபெறும் பிரமாண்டமான முன்னெடுப்பாகும்.

முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் 6 அணிகள் இந்த ஏலத்தில் பங்கேற்றிருந்தன. ஒவ்வொரு அணிக்கும் 15,000 புள்ளிகள் வழங்கப்பட்டு, குறைந்தது 15 வீரர்களை தேர்வு செய்ய வேண்டும் என்னும் விதி முறையிலே ஏலம் நடைபெற்றிருந்தது.

முல்லை பிரீமியர் லீக் போட்டியில் குருந்தூர் அணியினை இ.கவாஸ்கரும், முல்லை டைமன் அணியினை கெ.கஜேந்திரனும், புதுவை புயல்கள் அணியினை கெ.ஜனீந்திர காந்தும், முல்லை வாரியர்ஸ் அணியினை எம்.நிஷாக்கும், முல்லைஅக்னி அணியினை எஸ்.நிமாகரனும், முல்லை ஏர்ஜன்சுப்பர்வோய்ஸ் அணியினை கெ.நிஷாந்தனும் அணிகளின் உரிமையாளர்களாக தங்களை முன்னிறுத்தி வீரர்களை முன்னோக்கி நகர்த்த தங்கள் அணிக்காக வீரர்களை போட்டியிட்டு தேர்வு செய்திருந்தனர்.

முல்லை பிரீமியர் லீக் போட்டிகள் 2024 ஜனவரி 18 ஆம் திகதி மிகச் சிறப்பாக மாமூலை சுதன் சுதனா விளையாட்டு கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளதுடன் இதன் இறுதி போட்டியானது பெப்ரவரி மாதம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளது.









# தமிழக ஆளுநருடன் விஜய் சந்திப்பு: 3 கோரிக்கைகளை முன்வைத்து மனு

அண்ணா பல்கலை. மாணவி துஷ்பிர யோக சம்பவத்தைத் தொடர்ந்து தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியை த.வெ.க. தலைவர் விஜய் நேற்று சந்தித்துப் பேசினார்.

இதன்போது, தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கை பாதுகாக்க வேண்டும், அனைத்து இடங்களிலும் பெண்க ளுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், புயல் பாதிப்புக்கு மாநில அரசு கேட்கும் நிவாரணத் தொகையை மத்திய அரசு முழுமையாக வழங்க வேண்டும் ஆகிய 3 கோரிக்கைகள் கொண்ட மனுவை விஜய் தமிழக ஆளு நரிடம் வழங்கியுள்ளார்.

ஆளுநருடனான சந்திப்பின் போது விஜய்யுடன் த.வெ.க. பொதுச் செய லாளர் ஆனந்த், பொருளாளர் வெங் கட்ராமன் ஆகியோர் இருந்தனர். ஆளுநரிடம் தமிழ் மற்றும் ஆங்கி லத்தில் தயாரிக்கப்பட்ட மூன்று பக்கங்களைக் கொண்ட அறிக்கையை



விஜய் கொடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த் வெளி யிட்டுள்ள அறிக்கையில்,

“தவெக தலைவர் தலைமையில் ஆளுநர் ஆர்.என்.ரவியை சந்தித்து மனு அளித்தோம்.

எங்கள் மனுவில், தமிழகத்தில் சட் டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டும் என்றும், அனைத்து இடங்களிலும் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய உரிய நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என்று வலி யுறுத்தியுள்ளோம். மேலும், தமிழகம் முழுவதும் அண்மையில் பெய்த பருவ மழை மற்றும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் உரிய நிவாரணம் கிடைக்கவில்லை. இந்த விவகாரத்தில் மாநில அரசு கேட்கும் நிவாரணத் தொகையை மத்திய அரசு முழுமையாக வழங்க வேண்டும், என த.வெ.க. சார் பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. எங்கள் கோரிக்கைகளை கேட்ட ஆளுநர், அவற்றைப் பரிசீலிப்பதாக கூறினார்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழக அரசை கண்டித்து அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்



தமிழக தி.மு.க. அரசை கண்டித்து புதுச்சேரியில் மாநில அ.தி.மு.க. சார்பில் அண்ணா சிலை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடத்தப்பட்டது.

சென்னை அண்ணா பல்கலை கழக மாணவி துஷ்பிரயோக சம்பவத் தில் குற்றவாளிகளுக்கு சாதகமாக செயல்படுவதாக தமிழக தி.மு.க. அரசை கண்டித்தும், அரசியல் இடையூறின்றி நீதி வழங்கிட சி.பி.ஐ. விசாரணை வேண்டி யும் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்துக்கு மாநில செயலா ளர் அன்பழகன் தலைமை தாங்கினார். மாநில ஜெயலலிதா பேரவை செயலா ளர் பாஸ்கர், மாநில துணைத்தலை வர், முன்னாள் எம்.எல்.ஏ ராஜாராமன், முன்னாள் எம்.எல்.ஏ கோமளா உட்பட பலர் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அ.தி.மு.கவினர் தமிழக தி.மு.க. அரசை கண்டித்து கோஷம் எழுப்பினர்.

இதன்போது மாநில செயலாளர் அன்பழகன் கருத்து தெரிவிக்கையில்,

“மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஆதரவான நிலைப்பாட்டை பொலிஸ் எடுத்துள்ளது தவறான செயல். முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத் தீர்ப் புக்கு நேர்மாறாக வெளியிட்டு பாதிக்கப் பட்ட குடும்பத்தை பொலிஸார் களங்கப் படுத்தியுள்ளனர். இது புகார் அளித்த பெண்ணின் குடும்பத்தினருக்கு பொலி ஸால் விடுத்த எச்சரிக்கை நடவடிக்கை யாகும். குற்றம் சாட்டப்பட்டவர் பேசிய சார் யார் என இதுவரை தெரியவில்லை. இவ்வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டால்தான் பாதிக்கப்பட்ட பெண் ணிற்கு உரிய நீதி கிடைக்கும். இந்த வழக்கு சம்பந்தமாக தமிழக முதல்வர் இன்று வரை வாய் திறக்காமல் மௌனம் காப்பது ஏன்?

தி.மு.க. கூட்டணி கட்சிகளான காங்கி ரஸ், இடதுசாரிகள், வி.சி.க, ம.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் இவையெல் லாம் வாய்மூடி மௌனம் காப்பது ஏன்? புதுச்சேரியில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் முதல்வர் நாராயணசாமி மற்றும் கூட்டணி கட்சியினர் திரிபுரா, மணிப்பூர் எங்கேயாவது ஒரு பெண் பாதிக்கப்பட்டால் வாயில் போராடியிருப் பார்கள். சந்தர்ப்பவாத அரசியல்வாதி களுக்கு வரும் தேர்தலில் மக்கள் பாடம் புகட்டுவார்கள்.” – என்றார்.



# எத்தியோப்பியாவில் ஆற்றில் கவிழ்ந்த வாகனம் 71 பேர் பலி

தெற்கு எத்தியோப்பியாவில் பாரவூர்தி ஒன்று ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 71 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் 68 ஆண்களும் 3 பெண்களும் அடங்குகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், ஐந்து பேர் ஆபத்தான நிலையில் போனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர் என குறிப்பிடப்படுகிறது.

பாரவூர்தியில் அதிக பயணிகளை ஏற்றிச் சென்றமையே விபத்துக்குக் காரணம் என அந்த நாட்டுக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பாகிஸ்தானில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 10 பேர் பலி

பாகிஸ்தானின் மியான்வாலியில் இருந்து ராவல்பிண்டிக்கு சென்ற பயணிகள் பஸ் விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்தனர் என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

30 இற்கும் மேற்பட்டோர் பயணம் செய்த மேற்படி பஸ், அட்டோக் மாவட்டத்தில் உள்ள நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்தபோது, எதிர்பாராதவிதமாக வீதியோரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில், பஸ்ஸில் பயணம் செய்த 10 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 22 பேர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்களைப் பொது மக்களின் உதவியுடன் பொலிஸார் மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

பஸ் அதிவேகமாகச் சென்றமையே இவ் விபத்துக்குக் காரணம் என அந்நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.





# இன்றைய ராசி பலன்கள் - 31.12.2024




இன்று தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம். இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். இதிலிருந்து பயனுள்ளதை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலைத் தரும்.

பணிகள் அதிகமாக காணப்படும். இன்று சூழ்நிலை அந்தளவு சாதகமாக இருக்காது. உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை ஏற்படும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை வெற்றிகரமாக ஏற்படுத்த அனுசரித்து போகும் அணுகுமுறை தேவை.

ஆன்மீக நோக்கத்துக்கும் பயணத்துக்கும் பணத்தை செலவு செய்வீர்கள். இதில் ஈடுபடுவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

கண்ணுக்கான சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பல்வலிக்கான வாய்ப்பும் உள்ளது.




நீங்கள் எடுக்கும் முயற்சியில் தடைகளைக் காண்பீர்கள். அதிக சிந்தனையை தவிர்க்க வேண்டும் உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். இன்றைய சூழ்நிலையை சமாளிப்பதை சற்று கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மோதல் நேரலாம். அமைதியாகவும் சூழ்நிலைக்கேற்றவாறும் இருந்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

நீங்கள் சம்பாதிக்கும் பணம் போதுமானதாக காணப்படாது. பணம் இழந்துவிடுவோமோ என்ற பயம் உங்களிடம் காணப்படும்.

முதுகுவலி ஏற்பட வாயுப்புள்ளது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கலாம். உங்கள் நண்பர்களை வெல்வீர்கள். இது பயன்தரத்தக்கதாக இருக்கும். நேர்மறையான மன நிலையோடு இன்றைய தினத்தில் செயல்களை மேற்கொள்வீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். பணியில் உங்களை மேம்படுத்திக்கொள்ள மிகுந்த வாய்ப்புகள் கிடைக்கும். உங்களுக்கு நற்பெயர் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவை பராமரிப்பீர்கள். நேர்மையான அணுகுமுறை மூலம் இது சாத்தியமாகும்.

பணம் அதிக அளவில் காணப்படும். சாதுர்யமாக பணத்தை செலவு செய்ய இன்றைய நாளை பயன்படுத்துவீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும்.




இன்று அமைதியின்றி காணப்படுவீர்கள். வேதனைப்படும் சூழ்நிலைகள் உருவாகும். நண்பர்களின் ஆதரவு குறையும். சற்று கவனமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. இதனால் கவலை ஏற்படும்.

உங்களின் அமைதியற்ற மனநிலை உறவை பாதிக்கும். நல்ல புரிந்துணர்வுக்கு உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

இன்று சிறிதளவு பணமே காணப்படும். அதிகமாக செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும். வீட்டின் புனரமைப்புக்கான செலவாக அது இருக்கலாம்.

இன்று காய்ச்சலுக்கு ஆளாக நேரலாம். ஆரோக்கியத்தில் எச்சரிக்கை தேவை.




இன்று பொறுப்புகளை அதிகமாக சுமக்க நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். என்றாலும் உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் இதனை சமாளிப்பீர்கள்.

கடின உழைப்பு காணப்படுகின்றது. என்றாலும் நீங்கள் வெற்றி பெற இயலாது. முறையாக திட்டமிடாததே இதற்கு காரணமாக இருக்கும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இந்த உணர்வு உங்கள் உறவை பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவு இருக்காது. நிதிநிலையை நன்கு பராமரிக்க வேண்டும். லாபமும் இருக்காது. நஷ்டமும் இருக்காது.

இன்று பதட்டம் காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் அதன் தாக்கம் காணப்படும். எனவே அத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.




இன்று சில சாதகமற்ற பலன்கள் கிடைக்கும். உங்கள் வாழ்வில் சில மாற்றங்களை சந்திப்பீர்கள். பயணங்கள் காணப்படும். தெளிவான மனதுடன் செயல்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணி நிமித்த பயணம் காணப்படும். சவாலான சூழ்நிலைகளை சந்திப்பீர்கள். தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

இன்று உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். இதனால் உறவில் புரிந்துணர்வை பாதிக்க முடியும்.

இன்று பண வரவு குறைவாக காணப்படும். குடும்பத்திற்காக உங்களிடம் உள்ள பணத்தை செலவு செய்வீர்கள்.

தூக்கப் பிரச்சினை காரணமாக இன்று உங்களிடம் பதட்டம் காணப்படும்.




உங்கள் மகிழ்ச்சி மற்றும் சௌகரியங்களை வளர்த்துக் கொள்வீர்கள். என்றாலும் சில தடைகளை நீங்கள் சந்திப்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை வளர்த்துக்கொள்ள இன்றைய நாளைப் பயன்படுத்துங்கள்.

சில தடைகளுக்குப் பிறகு வெற்றி காண்பீர்கள். திட்டமிட்டுச் சிறப்பாகப் பணியாற்றினால் இன்று உங்கள் பணியில் திருப்தி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்கும் வாய்ப்பு உள்ளது. நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். சிறு கடன் வகையில் இன்று பண வரவு காணப்படும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சனை ஏதும் காணப்படாது.




இன்று சிறப்பான நாள். எதிர்பாராத நன்மைகள் ஏற்படும் நாள். உங்கள் சமயோசித புத்தி மூலம் இன்றைய நாளை கழிப்பீர்கள்.

உங்கள் பணியின் தரம் மேலதிகாரிகளால் பாராட்டப் படும். பணிகளை ஆற்றும் போது உங்கள் அணுகுமுறையில் வேகம் காணப்படும்.

இன்று மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். இன்றைய நாளையும் மகிழ்ச்சியாக்குவீர்கள்.

பணபுழக்கம் போதுமானதாக இருக்கும். காப்பீடு மற்றும் பூர்வீக சொத்து மூலம் உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். எனவே ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 31.12.2024




இன்று வெற்றி காண்பதற்கு அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டியது அவசியம். அவசர முடிவுகள் இன்று எந்தப் பயனையும் அளிக்காது.

பணியில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் சரியாக திட்டமிட வேண்டும். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையுடன் கண்டிப்பும் கறாருமாக இருப்பீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும். சகஜமான அணுகுமுறை மூலம் உறவில் நெருக்கம் காணலாம்.

பயணத்தின் போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும். பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தோள் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று ஆக்கப்பூர்வமான நாளாக இருக்கும். திறமை மூலம் நல்ல பலன்களைப் பெறலாம். நீண்ட கால திட்டங்களுக்கு இன்றைய நாளைப் பயன்படுத்தலாம். ஆன்மீக ஈடுபாடு நல்ல பலன் தரும்.

இன்று பணியில் உங்கள் திறமையை வெளிப்படுத்தும் நாள். இன்று அபாரமான திறமையை வெளிபடுத்துவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று அன்பிற்கும் காதலுக்கும் உரிய நாள். உங்கள் நகைச்சுவை மற்றும் காதல் உணர்வு மூலம் உங்கள் பிரியமானவரை மகிழ்விப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படும். உங்கள் நிதி மற்றும் பயனுள்ள முதலீடு பற்றி இன்று விரைந்து முடிவெடுப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் அவசரப் போக்கு காரணமாக இன்று நீங்கள் பல வாய்ப்புகளை இழக்க நேரும். புத்திசாலித்தனமாக இருப்பது நல்லது. விவேகத்துடன் நடந்து கொள்வது நல்லது.

பணியிடத்தில் இன்றைய நாள் சிறப்பாக இருக்காது. உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். பணியை இழப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

உங்களிடம் பாதுப்பின்மை உணர்வு காணப்படும். இதை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இந்த உணர்வு இந்நாளின் மகிழ்ச்சியைப் பாதிக்கும்.

உங்கள் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக பணத்தை இழப்பீர்கள். இன்று நிதி வளர்ச்சி காண்பது கடினமாக இருக்கும்.

பதட்டம் காரணமாக இன்று முதுகுவலி காணப்படும்.




இன்று நீங்கள் எடுக்கும் முயற்சியில் நல்ல பலன் கிடைக்கும். நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்களுக்கு வெற்றி எளிதில் நிச்சயம் கிடைக்கும்.

இன்று பணிகள் சுமுகமாக நடக்கும். பணியில் முன்னேற்றம் காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பை வளர்த்துக் கொள்வீர்கள். இருவரும் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள இது உதவும்.

பணம் அபரிமிதமாக காணப்படும். ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் பண வரவிற்கு வாய்ப்புள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.



# மன்னார் சாந்திபுரத்தில் காணாமல்போன வயோதிபர் சௌத்பார் கடற் பகுதியில் நேற்றுச் சடலமாக மீட்பு!

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் சௌத் பார் கடற்பரப்பில் மிதந்து வந்த சடலம் ஒன்றை நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் பொலிஸார் மீட்டனர். சடலமாக மீட்கப்பட்டவர் காணாமல் போன - சாந்திபுரம் பகுதியை சேர்ந்த - 59 வயதுடைய கூலித் தொழிலாளி என அவரின் உறவினர் களினால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சதாசிவம் ராசு (வயது-59) என்ற குடும்பஸ்தரே கடந்த 28 ஆம் திகதி முதல் காணாமல் போன நிலையில், அவரை குடும்ப உறவினர்கள் தேடி வந்தனர்.

இந்த நிலையில் நேற்று அவர் மன்னார் சௌத் பார் கடற்பரப்பில் சடலமாக காணப்பட்டார். மீனவர்கள் கடற்படையினருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சடலத்தை மீட்ட கடற்படையினர் சௌத் பார் கடற்கரைக்கு கொண்டு வந்தனர்.

பின்னர் சம்பவ இடத்திற்கு வருகை தந்த மன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த போது சடலமாக மீட்கப்பட்டவர் மன்னார் சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த சதாசிவம் ராசு (வயது-59) என உறவினர்களினால் அடையாளம் காணப்பட்டார்.

சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.